DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.109/2019** |
| **Deposition of witness for** | : | **Defendant** |
| **Serial No. of Witness** | : | **DW3** |
| **Name** | : | திநேஷ் |
| **Father's Name** | : | முருகன் |
| **Village** | : | திசையன்விளை |
| **Taluk** | : | திசையன்விளை |
| **Age** | : | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 20.02.2026

**சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை.**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். நான் தற்போது திசையன்விளை நில அளவைத்துறை வட்ட சார் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். திசையன்விளை தாலுகா, இட்டமொழி கிராமம் புஞ்சை புல எண்கள் 139/1 சி , 154/2 ஏ, 167, 168/2, 175/1 ஏ 2, 175/2 ஏ 1, 238/1, 238/2, 246/2 மேற்படி புல எண்களுக்கான வரைபடங்கள் மொத்தமாக (எண்ணம் 9) கொண்டு வந்துள்ளேன் அதன் சான்றிட்ட நகல்கள் (அசலுடன் ஒப்பிடப்பட்டு) **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்ணிற்கான புல வரைபடம் சான்றிட்ட நகல்கள்(அசலுடன் ஒப்பிடப்பட்டு) **சா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்குவிசாரணை</u>

நான் எத்தனை வருடங்களாக திசையன்விளையில் நில அளவையராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் ஒரு வருடமாக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் ஆணையர் நியமனத்தின் போது சர்வேயர் உதவியுடன் தபசில் சொத்து அளக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் 238/1, 238/2, 246/2 ஒருசேர அமைந்துள்ளதா என்றால் சர்வே எண் 238/1,2 சேர்ந்தனையாக உள்ளது, சர்வே எண் 246/2 கொஞ்சம் தள்ளி அமைந்துள்ளது. நான் கொண்டு வந்த ஆவணங்களில் மேற்படி சர்வே எண்களின் இடத்தில் அனுபவம் செய்யும் நபர்களின் பெயர் துலங்காது என்றால் சரிதான். நான் கொண்டு வந்துள்ள

புல வரைபடத்தில் நபர்களின் பெயர் துலங்காது என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.